# அன்னை பூபதி தமிழ்க்கலைக்கூடம் - றொம்மன் வளாகம்
# 33 வது ஆண்டு கல்வியியற் போட்டிகள் - 2025

**சிறுவர் வகுப்பு → 5ம் வகுப்பு வரையான மாணவர்களின் போட்டி விபரங்கள்.**

**போட்டிக்கான விண்ணப்ப முடிவுநாள்: 30.01.2025**

**ஓவியப் போட்டி, சொல்வதெழுதுதல் போட்டி, பேச்சுப்போட்டி, கதைசொல்லும் போட்டி, திருக்குறள் மனனப்போட்டி(ஆண்டு 4 – ஆண்டு 12)**

போட்டியில் பங்குபற்ற விண்ணப்பித்த மாணவர்கள் போட்டி நடைபெறும் நாளில் சமுகமளிக்க வேண்டும்.

**ஓவியப்போட்டி:**

- 1 – 5ஆம் வகுப்பு மாணவர்கள் தாங்கள் விரும்பிய காட்சியை அல்லது படத்தை வரைந்து, நிறம் தீட்டுதல் வேண்டும்.
- ஓவியம் வரைவதற்கான தாள் பாடசாலையில் வழங்கப்படும். ஏனைய உபகரணங்கள் மாணவர்கள் கொண்டு வருதல் வேண்டும்.

## கதை சொல்லும் போட்டியில் பங்குபெறும் பிரிவு:

2019ஆம் ஆண்டு பிறந்தவர்கள் - சிறுவர் வகுப்பு

## பேச்சுப் போட்டியில் பங்குபெறும் ஆண்டு விபரம்:

| ஆண்டு | | வகுப்பு |
|---|---|---|
| **2012** | - | **ஆண்டு 7** |
| 2013 | - | ஆண்டு 6 |
| 2014 | - | ஆண்டு 5 |
| 2015 | - | ஆண்டு 4 |
| 2016 | - | வளர்நிலை 3 |
| 2017 | - | வளர்நிலை 2 |
| 2018 | - | வளர்நிலை 1 |

வளர்நிலை 1 இலிருந்து ஆண்டு 7வரை அனைத்து மாணவர்களுக்கும் பேச்சுக்குரிய பிரதிகள் வகுப்பறையில் வழங்கப்படும். பேச்சுப்போட்டியில் பங்குபற்ற விரும்பும் மாணவர் தம்மைத் தயார்செய்து தெரிவுக்கான போட்டி நடைபெறும் நாளில் சமுகம் தரவேண்டும்.

## குறிப்பு:

- **கதை சொல்லும் போட்டி:** சிறுவர்வகுப்பு மாணவர்கள் தாங்களாகவே கதைகளைத் தெரிந்தெடுத்து, (3 மணித்துளிகளுக்கு மேற்படாதவாறு) மனனம்செய்து சொல்லவேண்டும்.
  கதை 2 மணித்துளிகள் இருப்பது விரும்பத்தக்கது.
  மாணவர் சொல்லும் கதையின் பிரதியை அரையிறுதித் தெரிவுப்போட்டி நாளன்று கல்விப்பொறுப்பாளரிடம் ஒப்படைக்க வேண்டும்.
- வளர்நிலை 1 ➜ ஆண்டு 7 வரை அனைத்து மாணவர்களுக்கும் பேச்சுக்கான பிரதிகள் வகுப்பறையில் வழங்கப்படும். இணையத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.
- **வளர்நிலை 1 ➜ ஆண்டு 7 வரையான பேச்சுப்போட்டிகளின் போது, நடுவர்களினால் கவனிக்கப்படும் விடயங்கள்:**

  நிலை, உச்சரிப்பு, தொனி, பாவம், மனனம்(ஞாபகசக்தி)
- **வளர்நிலை 1 ➜ ஆண்டு 7 வரையான மாணவர்கள் தெரிவுப் போட்டிக்குச் சமுகமளிக்காவிடின் இறுதிப்போட்டியில் பங்குபெற முடியாது.**
- நடுவர்களின் தீர்ப்பே முடிவானது.

**குறிப்பு:- ஆண், பெண் இருபாலார்களுக்கும் தனித்தனியே போட்டிகள் நடைபெறும். ஏதாவது ஒரு பிரிவில் ஆண் அல்லது பெண் 3 பேருக்கு குறைவாக பங்குபற்றும் பட்சத்தில் ஆண் பெண் இருபாலாரையும் இணைத்தே போட்டிகள் நடாத்தப்படும்.**

## சொல்வதெழுதுதல் போட்டி வகுப்பு 1 – 5

போட்டிக்கு இணையத்தில் பதிவு செய்த மாணவர்களே பங்குபற்றலாம். சொல்வதெழுதுதல் போட்டியானது கீழ்வரும் ஒழுங்குமுறையில் நடைபெறும்.

வகுப்பு 1:

- 15 சொற்கள் சொல்வதெழுதுதலுக்கு மாணவர்களுக்குச் சொல்லப்படும். சொல்வதெழுதுதலுக்குரிய சொற்கள் மாணவர்கள் முதலாம் வகுப்பில் கற்ற பாடங்களிலிருந்து (அலகு 1 - 6) தெரிவுசெய்து கொள்ளப்படும்.

வகுப்பு 2

- 15 சொற்கள் சொல்வதெழுதுதலுக்கு மாணவர்களுக்குச் சொல்லப்படும். சொல்வதெழுதுதலுக்குரிய சொற்கள் மாணவர்கள் இரண்டாம் வகுப்பில் கற்ற பாடங்களிலிருந்து (அலகு 1 -6) தெரிவுசெய்து கொள்ளப்படும்.

வகுப்பு 3

- 20 சொற்கள் சொல்வதெழுதுதலுக்கு மாணவர்களுக்குச் சொல்லப்படும். சொல்வதெழுதுதலுக்குரிய சொற்கள் மாணவர்கள் மூன்றாம் வகுப்பில் கற்ற பாடங்களிலிருந்து (அலகு 1 -6) தெரிவு செய்து கொள்ளப்படும்.

வகுப்பு 4

- 10 சொல்லியம் சொல்வதெழுதுதலுக்கு மாணவர்களுக்குச் சொல்லப்படும். சொல்வதெழுதுதலுக்குரிய சொல்லியங்கள் மாணவர்கள் நான்காம் வகுப்பில் கற்ற பாடங்களிலிருந்து (அலகு 1 -6) தெரிவுசெய்து கொள்ளப்படும்.

வகுப்பு 5

- சொல்வதெழுதுதலுக்கு மாணவர்களுக்கு ஒரு பந்தி சொல்லப்படும். சொல்வதெழுதுதலுக்குரிய இப்பந்தி ஐந்தாம் வகுப்பில் மாணவர்கள் கற்ற பாடங்களிலிருந்து (அலகு 1 -6) தெரிவுசெய்து கொள்ளப்படும்.

**சொல்வதெழுதுதலுக்குரிய சொற்கள், சொல்லியங்கள், பந்தி போட்டி நடைபெறும் அன்று கல்வியிற்போட்டிக்குழுவினால் தெரிவு செய்யப்படும்.**

நடுவர்களால் சொல்வதெழுதுதல் போட்டியினை திருத்தும் போது கவனத்தில் கொள்ளப்படும் விடயங்கள்:

- சொற்கள் சரியாக எழுத்துப்பிழையின்றி எழுதப்பட்டிருக்க வேண்டும்.
- எழுத்துகள் தெளிவாக எழுதப்படவேண்டும்.
- குறியீடுகள் கவனத்தில் கொள்ள வேண்டும்( முற்றுத்தரிப்பு, கேள்விக்குறி போன்றவை)

சொல்வதெழுதுதல் எழுதுவதற்குரிய தாள் பாடசாலையில் வழங்கப்படும்.

| | | |
|---|---|---|
| சொல்வதெழுதுதல் போட்டி **(1 - 5)** | 01.02.2025 | 13:00 - 13:30 |
| ஓவியப்போட்டி **(1 - 5)** | 01.02.2025 | 13:45 - 14:45 |
| அரை இறுதிப்போட்டி - பேச்சுப்போட்டி (1 - 7)<br>கதை சொல்லும் போட்டி – சிறுவர்வகுப்பு | 15.02.2025 | 13.00 |
| திருக்குறள் மனனப் போட்டி ( இறுதிப்போட்டி)(4-12) | 16.02.2025 | 14:30 |
| இறுதிப் பேச்சுப்போட்டி (1 - 7)<br>கதை சொல்லும் போட்டி – சிறுவர்வகுப்பு | 08.03.2025 | 14:00 |